வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 08.04.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 99 பக்கங்கள் : 12




# நாட்டின் சனத்தொகையில் 5.3 சதவீதத்தினரே வடக்கில்!

## சனத்தொகை வளர்ச்சி 0.5 வீதமாக வீழ்ச்சி

- *முல்லைத்தீவில் சனத்தொகை வளர்ச்சி 2.23 வீதம்*
- *வசிப்பிடமற்றோர் இல்லாத மாவட்டம் கிளிநொச்சி*


கொழும்பு, ஏப்ரல் 08

**நாட்டின் மொத்த சனத்தொகையில் வெறும் 5.3 சதவீதத்தினரே அதாவது, 11 இலட்சத்து 49 ஆயிரத்து 240 பேரே வடக்கு மாகாணத்தில் வசிக்கின்றனர். நாட்டில் மிகவும் குறைந்த சனத்தொகை கொண்ட மாகாணமாகவும் வடக்கே காணப்படுகிறது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.**

இதேவேளை, கிழக்கு மாகாணம் 17 இலட்சத்து 82 ஆயிரத்து 50 பேருடன் மொத்த சனத் தொகையில் 8.2 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு - 2024 அறிக்கை நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது. இந்த தொகை மதிப்பு இரு கட்டங்களாக நடைபெற்றது. 2025 பெப்ரவரி 2ஆவது வாரம் வரை பதிவுகள் உள்ளடக்கப்பட்டன.

இதன்படி, நாட்டின் மொத்த சனத்தொகை 2 கோடியே 17 இலட்சத்து 63 ஆயிரத்து 170 ஆகும். இது 2012 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் 14 இலட்சம் அதிகரிப்பாகும். எனினும், நாட்டின் சனத் தொகை வளர்ச்சியானது 0.7 வீதத்திலிருந்து 11



# ஐ. எம். எவ்வின் கடன் வசதி; 4ஆம் கட்ட பேச்சு ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 08

சர்வதேச நாணய நிதிய (ஐ. எம். எவ்) பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப் பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் நான்காவது மீளாய்வு தொடர்பான ஆரம்ப கலந்துரையாடலாக இது அமைந்தது.


ஜனாதிபதி பணிமனையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் போது இலங்கை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் எதிர்கால நிதி 11

# புதிய வரி விதிப்பு தொடர்பில் ஜூலி சங்குடன் விஜித பேச்சு!

கொழும்பு, ஏப். 08

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு தொடர்பில் வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் நேற்றுக் கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடல் குறித்து அமெரிக்க தூதுவர் 11



# சட்டம், ஒழுங்கை உறுதி செய்வதற்கு பொலிஸ் துறையில் மாற்றம் தேவை!

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 08

சட்டம், ஒழுங்கு மற்றும் மேலாதிக்கத்தை உறுதி செய்வதற்கு இலங்கை பொலிஸில் சாதகமான மாற்றம் அவசியம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பல துறைகள் வீழ்ச்சி யடைந்துள்ள தருணத்தில், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி அரசியல் அதிகாரத்தை மாற்ற பிரஜைகள் நடவடிக்கை எடுத்தமையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் அதிகாரத்தை மாற்றுவதன் மூலமாக மாத்திரம் ஒரு நாடு வெற்றி பெறாது. அனைத்துத் துறைகளிலும் சாதகமான மாற்றம் தேவை என்றும் 11

# தென்னக்கோனுக்கு எதிரான பிரேரணை இன்று சபையில்!

கொழும்பு, ஏப். 08

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான பிரேரணை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று சந்தன சூரியாரச்சி எம். பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், தற்போது விளக்கமறியலில் இருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் 11

# ஐ. சி. சி. ரோம் சட்டத்தை இலங்கை ஏற்கவேண்டும்!

## சர்வதேச மன்னிப்பு சபை நீதியமைச்சருக்கு கடிதம்

புதுடில்லி, ஏப். 08

உள்நாட்டு போரின்போது இடம்பெற்ற குற்றங்களுக்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றுக்கு முடிவு காண்பதற்கும் உதவும் என்பதால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ஐ. சி. சி) ரோம் சட்டத்தை இலங்கை ஏற்றுக்கொள்வது அவசியம் - என்று 11

# பயங்கரவாத சட்டத்தில் கைதானவருக்கு பிணை

கொழும்பு, ஏப். 08

இஸ்ரேலுக்கு எதிராக ஸ்ரிக்கர் ஒட்டிய குற்றத்தில் கைது செய்யப்பட்டு, பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மொஹமட் ருஷ்டி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த 22 ஆம் திகதி வணிக வளாகத்தில் கைது செய்யப்பட்ட ருஷ்டியை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அத்தனகல்ல நீதிமன்றில் நேற்று திங்கட் கிழமை முற்படுத்தினர். இதன்போதே, 11

# விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழப்பு!

வடமராட்சி, ஏப். 08

மோட்டார் சைக்கிள் விபத்தில் படு காயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை உயிரிழந்தார்.

இந்த விபத்தில் வடமராட்சி - அல்வாய் கிழக்கை சேர்ந்த பிரபாகரன் பிரணவன் (வயது 23) என்பவரே உயிரிழந்தார். 11

# என்னை சிறை வைப்பதால் பிரச்னைக்கு தீர்வு கிட்டாது!

## நாமல் எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஏப். 08

"நாமல் ராஜபக்ஷவை விளக்கமறியலில் வைப்பதால் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது என்று சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

சொத்து கொள்வனவின்போது இடம் பெற்ற மோசடி தொடர்பாக அவரிடம் சி. ஐ. டிக்கு அழைத்து நேற்றைய தினம் வாக்குமூலம் பதிவு செய்த னர். இதன் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளும் 11

# பங்கு சந்தை திடீர் சரிவு

கொழும்பு, ஏப். 08

கொழும்பு பங்கு சந்தை 5 சத வீதத்துக்கும் மேலாக நேற்றைய தினம் சரிவைச் சந்தித்தது. இதனால், வழக்க மான வர்த்தக நடவடிக் கைகள் சுமார் 30 நிமிடங்கள் நிறுத்தப்பட்டன.

இதன்படி, பங்குச் சந்தை நடவடிக்கைகள் காலை 9.51 மணி முதல் நிறுத்தப்பட்டன. முற்பகல் 10.21 மணிக்கே வர்த்தக நடவடிக்கை 11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றவேளை...! (படங்கள்: ஐ.சிவசாந்தன்)



# உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிமானி கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஏப். 02

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகமும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்தும் சமுர்த்தி அபிமானி கண்காட்சியும் புத்தாண்டு விற்பனை சந்தையும் நேற்று ஆரம்பமானது.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எவ். சி. சத்தியசோதி ஆரம்பித்து வைத்தார்.

வங்கிகளின் பிரதிநிதிகள், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ம. கியூமன், கருத்திட்ட முகாமையாளர் வ. கேதீஸ்வரசர்மா மற்றும் பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த விற்பனை கண்காட்சி இன்றைய தினமும் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுங்கள்!

முல்லைத்தீவு, ஏப். 08

முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் உப தலைவர் வி. அருள்நாதன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அத்துடன், தற்போதைய கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவுக்கு வருகை தந்து மீனவர்களின் பிரச்னைகள் தொடர்பில் கேட்டறியவில்லை என்றும் அவர் இதன்போது குற்றஞ்சாட்டினார்.

(ஐ)

# கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்று திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மேற்கு பிரிவு நீர்ப்பாசன திணைக்களத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 3ஆம் திகதி உயிரிழந்தார். அவரின், மரணத்துக்கு அந்தப் பிரிவின் பொறியியலாளர்தான் காரணம் என்று சில தகவல்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

இது உண்மைக்கு புறம்பானது என்றும் தமது திணைக்களத்தை அவமதிக்கும் செயல் எனவும் கூறியே அவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ஐ)


# கைத்தொழில் அமைச்சின் திட்டங்கள் வடக்கில் விரிவாக முன்னெடுக்கப்படும்

## ஆளுநரிடம் பிரதி அமைச்சர் உறுதி

கொழும்பு, ஏப். 08

வடக்கில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு ஊடான வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் விரிவாக முன்னெடுக்கப்படும் என்று அந்த அமைச் சின் பிரதி அமைச்சர் வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபயசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இந்த சந்திப்பில், சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு பொருத்தமான காணிகளை அடையாளப்படுத்தி வழங்குமாறு பிரதி அமைச்சர், ஆளுநரிடம் கோரினார். அத்துடன், வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் தொழில்கற்கைகளை நோக்கிய மாணவர்களின் ஆர்வம் தொடர்பாகவும் பிரதி அமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும், நெல் கொள்வனவுக்கான வங்கிகளின் கடன் வசதிகளை அதிகரிப்பது தொடர்பாக ஆளுநர் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதி அமைச்சர், அது தொடர்பில் விரிவாக ஆராய்வதாகவும் குறிப்பிட் டார்.

விவசாய மற்றும் கடல் உணவுகளின் உற்பத்திகளை பெறுமதிசேர் உற்பத்தி பொருட்களாக மாற்றுவதற் கான தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனையும் பிரதி அமைச்சர் ஏற்றுக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தமது அமைச்சின் ஊடான வேலைத் திட்டங்களை வடக்கில் விரிவாக முன் னெடுப்போம் என்றும் அவர் ஆளுநரிடம் உறுதியளித்தார். (ஐ)

# மருந்தாளரை நியமிக்க கோரிக்கை!

வடமராட்சி, ஏப். 08

வடமராட்சி கிழக்கு நித்திய வெட்டை ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு மருந்தாளர் ஒருவரை நியமிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வே நாயகனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் கடிதம் மூலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நித்தியவெட்டை ஆரம்ப பிரிவு மருத்துவமனையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதால் உரிய மருந்தாளர் இன்றி கடமையில் இருக்கும் மருத்துவர் சிரமங்களை எதிர்கொள்கின்றார்.

நோயாளர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு தகுதியான ஒரு மருந்தாளரை நித்தியவெட்டை ஆரம்ப பிரிவு மருத்துவமனைக்கு உடனடியான நியமிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் விற்பனை சந்தை

வடமராட்சி, ஏப். 08

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்தும் தமிழ் புத்தாண்டு விற்பனை சந்தை நேற்று பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பமானது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பொ. சுரேஸ் குமார் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில், பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி பங்கேற்று விற்பனை சந்தையை நாடா வெட்டி திறந்துவைத்தார்.

விற்பனை சந்தையில் வடமராட்சி கிழக்கு பிரதேச உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், பலரும் சந்தையில் பங்கேற்று பொருட்களையும் வாங்கிச் சென்றனர்.

(ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.04.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒற்றையாட்சியை நிராகரித்தல்

ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு கட்சிகளுக்கு அப்பால்பட்டது. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாதிநிதி ஜெய்சாங்கர் ஒருமுறை இந்திய பாராளுமன்றத்தில் இதனை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். "நாங்கள் கடைப்பிடிக்கும் நிலைப்பாடானது ஏற்கனவேயிருந்த அனைத்து அரசாங்கங்களினதும் நிலைப்பாடாகும்", என்று அவர் கூறியிருந்தார்.

இலங்கைக்கு வருகை தரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்திய உயர் மட்டத்தினர் இந்த விடயத்தை வலியுறுத்தத் தவறியதில்லை. ஆனால், இந்தியாவை தமிழர் தரப்புகளால்தான் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியா, ஈழத் தமிழர் பிரச்னையில் நேரடியாகத் தலையீடு செய்யும் முடிவை எடுத்து, ஈழ ஆயுத அமைப்புகளுக்கு பயிற்சியளித்த காலத்திலிருந்து ஒரு விடயத்தைத் தெளிவாக வலியுறுத்தியிருந்தது. அதாவது, இலங்கையை பிளவுபடுத்தும் நோக்கில் இந்தியா எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளாது. அதாவது, தனிநாட்டு கோரிக்கையை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. அதுமட்டுமல்ல அதனை அனுமதிக்கவும் மாட்டாது. இதன் பொருள் என்ன? ஈழ ஆயுத அமைப்புகள் எவையேனும் இந்தியாவைமீறி, தனிநாட்டை அடைய முற்பட்டால் அதனை இந்தியா அனுமதிக்காது.

அப்போது, இலங்கைக்கான விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருந்த பார்த்தசாரதி அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை நேர்மையாகத் தெரியப்படுத்தியிருந்தார். உண்மையில், இந்தியா இது விடயத்தில் இரகசியமாக செயல்பட்டிருக்கவில்லை. இப்போதும் சிலர் இதற்கு சாட்சியாக இருக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்துதான் விடுதலைப் புலிகள் தவிர்ந்த இயக்கங்கள் தனிநாட்டை அடையலாம் என்னும் தங்களின் இலக்கு தொடர்பில் சந்தேகிக்கத் தொடங்கினர். இந்தியாவை விரோதித்துக் கொண்டு அதனை அடைய முடியாது என்னும் முடிவுக்கு வந்தனர். அவ்வாறு கருதிய இயக்கங்களே ஜனநாயக நீரோட்டத்தை தழுவிக் கொண்டன. அன்றைய சூழலில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் ஊடாக மாகாண சபை முறைமையை சாத்தியப்படுத்தியது.

அன்றிலிருந்து இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு மாகாண சபை முறைமைதான். அதிலுள்ள குறைபாடுகளை அனைவரும் அறிவர். குறிப்பாக மாகாண சபை முறைமையும் ஒற்றையாட்சி கட்டமைப்பும் ஒன்றையொன்று சமவலுவில் சார்ந்திருக்கவில்லை என்பதுதான் அடிப்படையான பிரச்னையாகும். ஆனால், அவ்வாறானதொரு முறைமைதான் இந்தியாவில் இருக்கிறது. தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாகாண ஆட்சியை கலைக்கும் அதிகாரம் மத்திக்கு உண்டு. கருணாநிதி தலைமையிலான அரசாங்கம் ஒருமுறை அவ்வாறு கலைக்கப்பட்டும் இருக்கிறது.

ஆனால், இங்கு கவனிக்கவேண்டிய விடயம் ஒன்று உண்டு - அதுதான் முக்கியமானது. அதாவது, தனது நாட்டில் நடைமுறையிலுள்ள ஓர் அதிகாரப் பகிர்வு முறைமையையே இலங்கை இன முரண்பாட்டுக்கான தீர்வாக இந்தியா அறிமுகம் செய்தது. ஆனால், அன்றைய சூழலில் அனைத்துத் தரப்புகளும் விடயத்தில் ஒன்றுபட்டு - ஒற்றுமையாக அரசியலை கையாள்வதில் தவறிழைத்தமையின் காரணமாக மாகாண சபை முறைமையை சரியான திசை நோக்கி முன்னகர்த்துவதில் இந்தியாவின் பங்கு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. பிரேமதாஸ - புலிகள் உடன்பாடு இந்தியாவின் தலையீட்டை தவிடுபொடியாக்கியது. இன்று இந்தியாவுக்கு பொறுப்பு உண்டு என்று தமிழர் தரப்புகள் கூற முற்படும்போது நினைவுக்குக் கொண்டுவர வேண்டிய முக்கிய விடயங்கள் இவைதான்.

ஒற்றையாட்சியை நீக்குவதற்கான நிலைப்பாட்டில் சரி அல்லது தவறு என்பது இங்கு விடயமல்ல. மாறாக, அதனை இந்தியாவால் எக்காலத்திலும் ஆதரிக்க முடியாது என்பதுதான் அடிப்படையானது. ஒருவேளை, இலங்கையின் ஆட்சியாளர்கள் கட்சிகளை கடந்து அவ்வாறானதொரு முறைமையை நடைமுறைப்படுத்த இணங்கினால் அப்போது, இந்தியாவும் அதற்கு நட்புக்கரம் நீட்டமுடியும். ஆனால், கொழும்பை அச்சுறுத்தி ஒற்றையாட்சியை நீக்கும் விடயம் ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. அவ்வாறானதோர் அரசியல் தேவைப்பாடு இன்றைய சூழலில் இல்லை.

## கஞ்சாவை வீட்டில் மறைத்து வைத்திருந்த பெண் கைது!

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சியில் கேரள கஞ்சாவை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பெண்ணின் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 கிலோ கேரளா கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றினர். இதையடுத்து, வீட்டின் உரிமையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## "மாணிக்கவாசகரும் திருவாசகமும்" சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 08

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 52 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து இளஞ் சைவப்புலவர் த. மனோஜ்குமார் "மாணிக்கவாசகரும் திருவாசகமும்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## பூநகரி பிரதேச சபைக்கான வாக்குச்சீட்டுகள் கையளிப்பு

கிளிநொச்சி, ஏப். 08

பூநகரி பிரதேச சபைக்கான தபால் மூல வாக்குச்சீட்டுகள் நேற்று திங்கட்கிழமை அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் வேட்புமனுக்கள் தொடர்பில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதனால், பூநகரி பிரதேச சபைக்கான தபால் மூல வாக்குச்சீட்டுகள் அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேச சபையில் தபால் மூலம் வாக்களிக்க 531 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## "தாரகன் வதை படலம்" சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 20ஆவது சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு ,சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து, பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையாற்றுவார். சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "தாரகன் வதை படலம்" என்னும் விடயப் பொருளில் நிகழ்த்தவுள்ளார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

## கடல் பசுவின் இறைச்சியுடன் வங்காலையில் ஒருவர் கைது

மன்னார், ஏப். 08

மன்னார், வங்காலை அக்னேஷ்புரத்திலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கடல் பசுவின் இறைச்சியுடன் சந்தேக நபர் ஒருவர் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வங்காலை , அக்னேஷ்புரத்தில் வசிக்கும் 64 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ கடல் பசு இறைச்சி வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.


இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னார் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப்ரல் - 08 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 08
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புது தொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**மகரம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# சர்வதேச காடுகள் தின கொண்டாட்டம்

கிளிநொச்சி, ஏப். 08

இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கமும் கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய சர்வதேச காடுகள் தினம் கடந்த 5 ஆம் திகதி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில் அதிபர் ப. ஜோயல் பியசீலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சர்வதேச காடுகள் தினத்தை முன்னிட்டு இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தால் மணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், மாணவர்களால் காடுகள் பற்றிய பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.



இந்த நிகழ்வில் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்க பிரதிநிதிகள், கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலம் விரும்பிகள் கலந்து கொண்டனர். (எ)

# ஓய்வுபெற்ற பிரதி திட்டமிடல் பணிப்பாளருக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 08

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி கடந்த 26 ஆம் திகதி ஓய்வு பெற்ற எஸ். ஆர். சர்வேந்திரனுக்கான கௌரவிப்பு நிகழ்வு திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் தலைமையில் கடந்த 5 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் உரையாற்றுகையில், ஓய்வு பெற்ற பிரதித் திட்டமிடல்



பணிப்பாளர் சர்வேந்திரன் தன் கடமைகளை பொறுமையுடன் சிறப்பாக கையாண்ட உத்தியோகத்தர். யுத்த காலங்களில் தன் கடமைகளிலிருந்து தவறாமல் பொறுப்புடன் சேவையாற்றிய உத்தியோகத்தர் எனவும் குறிப்பிட்டு புகழாரம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.(எ)

# தபால் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ், முப்படையினருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 08

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக அஞ்சல் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினருக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது, தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் பொலிஸ் மற்றும் முப்படையினர்கள் சிறப்பாக கடமையாற்றியதாகவும் அதற்கான நன்றியைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டு,



இம் முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் கடமைகளிலும் எம்முடன் இணைந்து ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்தச் செயலமர்வில் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் தபால் மூல அத்தாட்சிப் படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் அலுவலர்களின்

கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா, பிரதி ஆணையாளார் கே. ஜே. எஸ். மகாதேவ மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன் ஆகியோராலும் விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் நியமிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினர்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# தேர்தல் ஆணைக்குழ திட்டமிடல் பணிப்பாளர் யாழ். தெரிவத்தாட்சி அலுவலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனை கடந்த 05 ஆம் திகதி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளார் கே. ஜே. எஸ். மகாதேவ மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன் ஆகியோர் உடனிருந்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமொரு பொருளாதார சுனாமி ஏற்படுவதற்கு வாய்ப்பு

## எதிர்க்கட்சி தலைவர் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 08

**புத்தாண்டின் பின்னர் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை இழப்புகளை சந்திக்கும் பெரும் ஆபத்து உள்ளது. இதன் தொடர் தாக்கங்களால் மீண்டுமொரு பொருளாதார சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.**

புத்தளம், நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் நமது நாட்டின் ஏற்றுமதிகள் மீது 44 சதவீத பரஸ்பர வரி விதித்துள்ளது.

நமது நாடு அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கு 88 சதவீத வரி விதித்தமையே இதற்கு காரணமாகும். இதன் காரணமாக, நமது நாடு ஏற்றுமதி விலைக் கான போட்டித் தன்மையை இழந்துள்ளது.

நாட்டின் ஆடை ஏற்றுமதியில் 40 வீதம் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது. இது ஆபத்தான நிலைமைகளை தோற்றுவிக்கும் என்பதால், சில மாதங்களுக்கு முன்பே இது குறித்து அரசாங்கத்துக்கு எடுத்துரைத்தோம்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி மகத்தான மக்கள் ஆணையை பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு அமெரிக்காவுக்கு வரும் பொருட்களுக்கு வரி விதிக்கப்போவதாக அறிவித்த சந்தர்ப்பத்தில், நான் பாராளுமன்றத்தில் இது தொடர்பில் சுட்டிக்காட்டி முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்தேன். அதனை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் பிரச்னைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தபோதிலும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எதிர்க்கட்சி எம். பிக்கள் பேசுவதற்கான நேரம் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான தொரு நிலையில் தீர்வை வரி விதிக்கப்படலாம் என்பது குறித்து சுட்டிக்காட் டப்பட்ட போதிலும் அரசாங்கம் அதனை அலட்சியப்படுத்தி வேடிக்கை பார்த்தது.

தற்போது என்ன தான் கூறினாலும் இந்த வரி விதிப்பு ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள் ளது.

புத்தாண்டு விடுமுறைக்கு வீடுகளுக்குச் செல்லும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் புத்தாண்டு விடுமுறையின் முடிவில் வேலை தொடர்பில் நிச்சயமற்ற நிலையை எதிர் கொள்வர்.

இதன் காரணமாக, தொழிற்சாலைகள் வீழ்ச்சி கண்டு, தொழிலாளர்களின் தொழில்கள் இல்லாது போய், பொருளாதார வளர்ச்சி விகிதம் குறையும்.

இது ஒட்டுமொத்த மக்களையும் பொருளாதார ரீதியாக கக்கடுமையாக பாதிக்கும். அந்நிய செலவாணி குறைவடையும்.

பொருளாதார வளர்ச்சி விகிதம் கீழ் நிலைக்கு வரும். அவசர மாற்றீடுகள் மூலம் இந்த வருமானத்தை எம்மால் ஈட்ட முடியாது போகும். ஆகையால் 2028 ஆம் ஆண்டு முதல் கடனை செலுத் துவதற்கு இது பெரும் தடை யாக அமையும்.

2033 இல் செலுத்த வேண்டிய கடனை 2028 இல் இருந்து அடைக்க வேண்டியுள்ளது. இதற்காக பேண வேண்டிய பொருளாதார வளர்ச்சி விகிதத்துக்கு இந்த வரி விதிப்பு மரண அடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கடுமையான பொருளாதார நெருக்கடியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டுமொரு பொருளாதார சுனாமி நாட்டை தாக்கும் வாய்ப்புகள் அதிகம் என்பதையும் மக்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சர்வதேச அரசியல் குறித்து தெளிவான புரிதல்வேண்டும்!

## ஐக்கிய தேசிய கட்சி அறிவுரை

கொழும்பு, ஏப். 08

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு விதிக்கும் வரி கொள்கைகள் மற்றும் சர்வதேச சவால்களை எதிர்கொள்ள, சர்வதேச அரசியல் குறித்து தெளிவான புரிதல் தேவை என்று முன்னாள் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இராஜாங்க தலைவர்களுக்கு சர்வதேச அரசியல் பற்றிய புரிதல் இல்லாவிட்டால், நாடு மிக விரைவில் ஆழ்ந்த நெருக்கடிக்குள் தள்ளப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்வதேச அரசியலில் கடந்த ஐந்து அல்லது ஆறு மாதங்களில் ஏற்பட்ட மாற்றங்களை அரசு முன்பே அடையாளம் காண வேண்டியது அவசியம். அதற்காகவே அனுபவம் மிக முக்கியம்.

அதனால்தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடக்கத்திலேயே பிரதமர் மோடியின் வருகை இலங்கைக்கு முக்கியம் என்று கூறியிருந்தார்.

மோடி 2019இலும் இலங்கைக்கு வந்திருந்தார். சிலர் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் இந்தியா எப்போதும் எங்கள் பக்கமாக இருந்து உதவி செய்த நாடாகத் திகழ்கின்றது. ஜனாதிபதி ரணிலும் பிரதமர் மோடியும் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை அரசியல் ரீதியாக பாதுகாக்க வேண்டியது அவசியம் - என்றார். (ஐ)

# இன்றைய அரசாங்கம் அலங்கோலமாகிவிட்டது

## மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, ஏப். 08

பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்பும் செயல்பாட்டில் தோல்வி அடைந்த இந்த அரசாங்கம், தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி வெற்றி பெற்று இன்று அலங்கோலமான அரசாங்கமாக மாறியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் வடகொழும்பு வட்டாரத்தில் போட்டியிடும் ஜனநாயக மக்கள் முன்னணியின் வேட்பாளரை ஆதரித்து நடத்திய பிரசார கூட்டத்தில் பங்கேற்ற பாதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# இந்தியாவுக்கு மட்டும் ஆதரவாக செயல்படுவதை அனுமதியோம்!

## சரத் வீரசேகர சொல்கிறார்



கொழும்பு, ஏப். 08

இந்தியாவுக்கு மாத்திரம் ஆதரவாக ஒரு தலைப்பட்சமாக இந்த அரசாங்கம் செயல்படுவதை அனுமதிக்க முடியாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்தியப் பிரதமர் மோடி நாட்டுக்கு வந்தார்என்பதற்காக தற்போதைய அரசாங்கம் பிரதமருடன் விதத்திலும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட முடியாது. இந்த அரசாங்கம் நாட்டின் உரிமையாளர்கள் இல்லை. பொறுப்பாளர்கள் மாத்திரமே.

எனவே, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய இதுபோன்ற உணர்ச்சி பூர்வமான தீர்மானங்களை எடுக்கும் உரிமை நாட்டின் பொறுப்பாளர்களுக்கு இல்லை. எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பே முக்கியமாகும்.

ஜெனிவா கூட்டத்தொடரில் கூட ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளே எமக்கு ஆதரவாக செயல்பட்டன. இந்தியா எமக்கு ஆதரவாக வாக்களித்திருக்கவில்லை. அவ்வாறான நாடோடு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் ஏனைய நாடுகள் அதிருப்தி அடையக்கூடும்.

இந்தியாவுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்- என்றார். (ஐ)

# தேர்தல் பதாகைகளை அகற்ற 2 ஆயிரம் பேர்!

கொழும்பு, ஏப். 08

தேர்தல் பதாகைகளை அகற்றும் பணியில் 2 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பிரதான பொலிஸ் தலைமையகத்தின் கீழ் நால்வர் இந் தப் பணியில் ஈடுபடுத் தப்படுத் தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

ஏனைய பொலிஸ் நிலையங்களில் மூவரும் கிராமிய மட்ட பொலிஸ் நிலையங்களில் இருவரும் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

எதிர்வரும் மே 6ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் வகையில் தற்காலிக அடிப்ப டையில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் 605 பொலிஸ் நிலையங்களுக்கு இவர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

# மனைவி, சகோதரரின் சிறைவாசத்தால் எனது அரசியல் நடவடிக்கை நிற்காது!

## எஸ். எம். சந்திரசேன சொல்கிறார்



கொழும்பு, ஏப். 08

தனது மனைவி மற்றும் சகோதரர் சமீபத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக சிறை வைக்கப்பட்டமையால் தனது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன, தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய சந்திரசேன,நீதித்துறை ஒரு சுயாதீன நிறுவனமாக இருப்பதால், நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கண்டியில் நடந்த ஒரு கூட்டத்தின் போது, எனது அயல் வீட்டாரான அமைச்சர் லால் காந்த, எந்தத் தவறும் செய்யாத எவரும் கைகளை உயர்த்துமாறு கேள்வி எழுப்பினார். ஆனால், ஒருவர் கூட கையை உயர்த்தவில்லை. அரசியல் அல்லது பிற நடவடிக்கைகளில் ஈடுபடும்போது குறைபாடுகள் ஏற்படுவது பொதுவானது. அரசியல் துறையில் பலர் இதேபோன்ற சம்பவங்களை எதிர்கொண்டுள்ளனர். இது கேலி செய்ய வேண்டிய ஒன்றல்ல - என்றார்.

அண்மையில், எஸ். எம். சந்திரசேனவின் சகோதரரான வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித், அவரின் முன்னாள் செயலாளராக பணியாற்றிய சந்திரசேனவின் மனைவி சாந்தினி ஆகியோருக்கு ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக 16 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைத்து கிராமங்களிலும் பொதுமக்கள் பாதுகாப்பு குழு!

## அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, ஏப். 08

**தூய இலங்கை திட்டத்துக்கு அமைய அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேற்படி பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.**



அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்பு குழுவை செயல்படுத்துவதற்கான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தூய இலங்கை திட்டத்துக்காக நாங்கள் கிராமத்தில் குழுவை உருவாக்குகிறோம். அந்த கிராமக் குழுவுக்கான ஒதுக்கப்பட்ட பணிகள் தொடர்பில் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்படும். மிகப்பெரிய பிரச்னைகள் உள்ளன. அவற்றை மதிப்பாய்வு செய்வதற்காகவே நாங்கள் இந்த குழுவை நிறுவுகிறோம்.

இந்தக் குழுவை கிராம சேவகரும் பிரதேச செயலாளரும் வழிநடத்துவார்கள். அது மட்டுமல்லாமல், பிரதேச செயலகத்தில் போதைப் பொருள் தடுப்புக்கு பொறுப்பானவரும் இதில் உறுப்பினராவார். அத்துடன், ஒரு மதிக்கத்தக்க நபர் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். இதற்கான செயல்குழு ஒன்றை நியமிப்போம். கிராமத்தில் அமைதியை பேணுவதற்கு நாங்கள் ஒரு தனி குழுவை நியமிப்போம் - என்றார். (ஐ)

# 70 இலட்சம் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் நிறைவு!

கொழும்பு, ஏப். 08

12 மாவட்டங்களுக்கான சுமார் 70 இலட்சம் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று அரச அச்சகம் தெரிவித்தது.

மேலும், 9 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் அரச அச்சகர் பிரதீப் புஷ்பகுமார கூறினார்.

மேலும், 13 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடப்படவுள்ளன. அத்துடன், 7 இலட்சம் தபால் மூல வாக்குச்சீட்டுகள் உட்பட 70 இலட்சம் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# உள்ளூராட்சி வேட்பாளர் கஞ்சாவுடன் கைதானார்

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கஞ்சா போதைப் பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - கருவலகஸ்வெவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உணவகங்களின் தரத்தை ஆய்வுக்கு உட்படுத்துங்கள்

## பேருந்து உரிமையாளர் சங்கம்

கொழும்பு, ஏப். 08

நீண்ட தூர பயணிகள் போக்குவரத்து பேருந்துகளுக்கு உணவு வசதிகளை வழங்கும் உணவகங்களின் தரம் குறித்து சுகாதார பிரிவினர் ஆய்வு செய்ய வேண்டும் என்று பேருந்து உரிமையாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உணவகங்களில் உள்ள உணவுகள் சுகாதாரமான முறையில் காணப்படுவதில்லை எனவும், கழிப்பறை மற்றும் சுகாதார வசதிகள் தரமற்ற முறையில் பராமரிக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் வந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மதுபான சாலைகளை மூட உத்தரவு

கொழும்பு, ஏப். 08

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மதுபான சாலைகளை மூடுவதற்கு கலால் திணைக்களம் அறிவித்தல் விடுத்திருந்தது.

இந்த காலப்பகுதியில் போதைப்பொருள் குற்றங்கள் மற்றும் புகையிலை குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1913 என்ற இலக்கத்துக்கு அழைத்து தெரிவிக்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கலால் திணைக்களத்தின் செயல்பாட்டு அறையுடன் குறித்த இலக்கம் 24 மணி நேரமும் இணைக்கப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் உள்ள அனைத்து கலால் உரிமம் பெற்ற மதுபான சாலைகளும் எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் மூடப்பட வேண்டும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நாட்களில், சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு மட்டுமே மதுபானம் வழங்க முடியும் என்றும் மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

பொலிஸ் காவலில் இளைஞன் மரணம்:

# வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவி நீக்கம்!

கொழும்பு, ஏப். 08

வெலிக்கடை பொலிஸாரின் காவலில் இருந்த இளைஞரின் மரணம் தொடர்பில் நீதியான விசாரணையை முன்னெடுக்க வசதியாக அந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கடமைகளை புறக்கணித்தமைக்காக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவில் நாவல என்ற இடத்தில் கடந்த முதலாம் திகதி வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டில் எம். சத்சரா நிமேஷ் (வயது-26) என்ற இளைஞர் குது செய்யப்பட்டார்.

அன்றைய தினம் அங்கொடை மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

இது குறித்து பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டிருந்த அறிக்கையில், உயிரிழந்த சந்தேகநபர் மனநல கோளாறால் பாதிக்கப்பட்டவர் போன்று நடந்தார் எனவும் அவரை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அறைச் சுவரில் பல தடவை தன்னைத்தான மோதி வருத்திக் கொண்டார். நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர அதிகாரிகள் சந்தேகநபரான இளைஞனை அங்கொடை மனநல மருத்துவமனையில் சேர்த்தனர். எவ்வாறெனினும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சந்தேகநபர் மறுநாள் புதன்கிழமை அதிகாலை உயிரிழந்தார் என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், நியாயமான, பாரபட்சமற்ற விசாரணையை நடத்துவதற்காக வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த சம்பவத்தின்போது கடமைகளை புறக்கணித்தனர் என்று தெரிய வந்த தன் அடிப் படையில், ஒரு பொலிஸ் சார் ஜன்ட், கான்ஸ்டபிள் ஒருவரும் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

# முப்படைகளிலிருந்து தப்பிய 1,700 பேர் இதுவரையில் கைது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 08

முப்படைகளில் இருந்து தப்பிச் சென்ற சுமார் ஆயிரத்து 700 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது பணியில் இருக்கும் பொலிஸார், முப்படைகளில் உள்ள சிலர் முழு பாதுகாப்பு பிரிவுக்கும் இழுக்கு ஏற்படுத்தும் வகையில் பாதாள உலகக் குழுவின் குற்றச் செயலுக்கு துணைபோயுள்ளனர். ஆகையால், அத்தகைய நபர்களை அடையாளம் கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் பணிநீக்கம் செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

கண்டியில் மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

பாதாள உலகக் குழுவின் குற்றச் செயல்கள் மற்றும் ஆங்காங்கே இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் என்பன நாட்டில் வெகுகாலமாக இடம்பெறும் நிகழ்வுகளாக உள்ளன. நாம் இவ்வாறான குற்றச்செயல்களை ஒரு போதும் நியாயப்படுத்த விரும்பவில்லை. அவ்வாறே போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பாதாள உலகக்குழுக்களை இந்நாட்டில் நிறுவுவதற்கு பல அரசியல் தலைமைகள் முயற்சித்துள்ளன. இது யாரும் அறியாத இரகசியம் அல்ல.

நாட்டில் இத்தகையோரை நிலைநிறுத்தி குற்றச்செயல்களின் மூலம் வெகுகாலமாக ஆட்சியை கைப்பற்றி ஆட்சி செய்துள்ளனர். ஆகையால் இத்தகைய செயல்பாடுகளை 4 மாதங்களில் இல்லாமல் ஒழிப்பதென்பது முடியாத காரியம். எனினும் நிச்சயமாக பாதாள உலகக்குழுக்களின் செயல்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். பொதுமக்களுக்கு அச்சமின்றி, சந்தேகமற்ற வகையில் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

பாதாள உலகக்குழுவை ஒழிப்பதற்கான விசேட திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும், ஆயுதங்களும் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்வாறே பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். முப்படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களே கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தெரியவந்துள்ளது.



இவ்வாறு முப்படைகளில் இருந்து தப்பிச் சென்ற சுமார் ஆயிரத்து 700 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள சந்தேகநபர்களை கைது செய்வதற்கான சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச நாடுகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவமனைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும்!

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 08

**நாட்டின் அனைத்து அரச மருத்துவமனைகளையும் டிஜிற்றல் மயமாக்குவதுடன் குறுகிய காலத்தில் மக்களுக்கு உயர்தரமான சிகிச்சை சேவைகள் மற்றும் உயர்ந்த பராமரிப்பை வழங்குவதே சுகாதார அமைச்சு மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் சுகாதார தகவல் தொழில்நுட்ப அமைப்பை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவு, மாதாந்த சிகிச்சை பிரிவு, ஆய்வகங்கள், கதிரியல் பிரிவு, உள் நோயாளர் பிரிவு மற்றும் வெளிநோயாளர் பிரிவு என அனைத்து பிரிவுகளும் தற்போது நவீனமயப்படுத்தப்பட்டு முழுமையாக டிஜிற்றல் மயமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு தரப்படுத்தப்பட்ட ஆய்வக சேவையை வழங்கும் நோக்குடன் கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் ஆய்வகத்தின் திசு அறிவியல் பிரிவு, இலங்கை அங்கீகார சபையால் ஆய்வகங்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரத்துக்காக சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் விண்ணப்பித்து.

இதற்கமைய அரச மருத்துவமனையில் உள்ள ஆய்வகம் தரப்படுத்தலுக்கு உட்படுவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும். சகல பொது சேவைகளையும் டிஜிற்றல் மயமாக்கி பொது மக்களுக்கு மிகவும் வசதியான மற்றும் திறமையான சேவையாக மாற்றுவதே தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோளாகும். கடமையில் உள்ள ஒன்றரை இலட்சம் சுகாதார ஊழியர்களின் தகவல்கள் உட்பட மனித வளங்களை நிர்வகிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் முழு கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. இதனை டிஜிற்றல் மயமாக்குவதற்கான முயற்சிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், டிஜிற்றல் மயமாக்கல் மூலம் சுகாதார பதிவுகளை ஒன்றிணைப்பதுடன், மருந்து விநியோக வலையமைப்பை எதிர்வரும் காலங்களில் தொழில்நுட்பத்துடன் நெறிப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு பராமரிப்பு மற்றும் உயர்தர சிகிச்சை சேவைகளை வழங்குவது சுகாதார ஊழியர்களின் பொறுப்பாகும்.

இதற்காக, சுகாதார அமைச்சு அதன் கீழ் பணிபுரியும் அனைவருக்கும் பணிபுரிவதற்கு அவசியமான சூழலை அமைத்துத் தருவதுடன், தொழில்சார் ஏனைய உரிமைகளையும் வழங்க தயாராக உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் ஆரோக்கியம்!

கொழும்பு, ஏப். 08

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமான நிலையில் காணப்படுகிறது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு, வாகன போக்குவரத்துத் திணைக்களத் தின் வாகன புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் என்பன தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை வெளியிட்ட அறிக்கையில்,

நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில், கொழும்பு 07, குருநாகல், கண்டி, காலி, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டி, பதுளை, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமான நிலையிலும் காணப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம், வவுனியா, குருநாகல், கொழும்பு 07, காலி, இரத்தினபுரி, எம்பிலிபிட்டி, பதுளை ஆகிய பகுதிகளில் மிதமான நிலையில் இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அதிகமாக போக்குவரத்து நெரிசல் காணப்படும் குறிப்பாக காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை மற்றும் பகல் வேளைகளில் 1.00 மணி முதல் 2.00 மணி மணி வரை காற்றின் தரம் குறைவடைந்து காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வீதியை கடக்க முயன்றவர் பேருந்து மோதி உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 08

பேருந்திலிருந்து இறங்கி வீதியை கடக்க முயன்ற பெண்ணை அதே பேருந்து மோதியதில் உயிரிழந்தார்.

தங்காலை - மாத்தறை பிரதான வீதியில் குடாவெல்ல பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த 65 வயது பெண்ணே உயிரிழந்தவராவார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கஷ்டம் போக பூசை செய்தவர் நகைகளைப் பறிகொடுத்தார்!

சிலாபம், ஏப். 08

தீய சக்திகளை விரட்ட பரிகார பூசை நடத்துவதாகக்கூறி 38 இலட்சம் ரூபாய்க்கு மேல் பெறுமதியுள்ள தங்க ஆபரணங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிலாபம் - முன்னேஸ்வரம் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நகைகளை திருட்டுக் கொடுத்தவருக்கு கடந்த முதலாம் திகதி முன்னேஸ்வரம் கோவில் அருகே மூவர் சோதிடம் கூறியுள்ளனர்.

இந்த சோதிடத்தை அவர் நம்பிய நிலையில் தனது கடின நிலையிலிருந்து மீண்டெழ சோதிடம் கூறியவர் கள் கூறிய படி பரிகார பூசையை நடத்த விரும்பியுள்ளார்.

இதன்படி, தான் சந்தித்த மூவரில் ஒருவரை பரிகார பூசைக்காக தனது வீட்டுக்கு அழைத்துள்ளார். அத்துடன், சந்தேகநபர் கூறியது போன்று தனக்கும், தன் மனைவிக்கும், தன் குழந்தைகளுக்கும் சொந்தமான தங்க நகைகளை ஒரு பானையில் வைத்து பூசை நடத்துபவரிடம் கொடுத்துள்ளனர்.

சடங்கு செய்தவரின் அறிவுறுத்தல்களின்படி, முழு குடும்பத்தினரும் வீட்டின் முன் கற்பூரத்தை ஏற்றி தெய்வத்துக்குக் காணிக்கை செலுத்தினர்.

அதன் பின்னர், பூசையை நடத்திய நபர் நகைகள் வைத்திருந்த பானையை கொடுத்து, இதனை பூசை அறையில் வைக்குமாறும் 4 நாட்களுக்கு திறக்கக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், சந்தேகத்தின்பேரில் கடந்த 4ஆம் திகதி அந்த பானையை திறந்தபோது அதில் நகைகள் இருக்கவில்லை. இதையடுத்து, பாதிக்கப்பட்டவர் சிலாபம் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

மேலும், தனது வீட்டுக்கு வந்து பூசை செய்தவர் இந்திய நாட்டவராக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் கூறியுள்ளார். (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப்.08

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீகலேவ பொலிஸ் பிரிவின் பொதானேகம பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கைது நடவடிக்கையில் 27 வயது நபரே கைது செய்யப்பட்டார். (ஐ)

# விபசார குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது

கொழும்பு, ஏப். 08

விபசார விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். விபசார விடுதியை நடத்தி வந்தவரும் மற்றும் அங்கு தங்கியிருந்த இரு பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கண்டி - கடலாதெனிய பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த கைது இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, ஏப். 08

173 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கொழும்பு - வத்தளை- எல இவுர வீதியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டனர். கைதானவர் 32 வயது நபராவார்.

அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நியாயமான விலையில் புதிய மீன்கள் விற்பனை

கொழும்பு, ஏப். 08

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் நியாயமான விலையில் புதிய மீன்கள் விற்பனை செய்யும் திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 300 மற்றும் 400 கிராம் உறைந்த மீன் (குழுணநெ குளைா) பொதிகள் நியாயமான விலையில் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் ஏற்படக்கூடிய மீன் தட்டுப்பாட்டை குறைக்கவும் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜே. ஏ. கே. மார்க் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தெரிவு செய்யப்பட்ட 21 சதொச விற்பனை நிலையங்களில் ஆரம்பகட்டமாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

# ஊழல், மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, ஏப். 08

ஊழல், மோசடி மற்றும் நிதி முறைகேடுகளுக்கு எதிராக வலுவான - தொடர்ச்சியான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்று பொது பாதுகாப்பு, பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால வலியுறுத்தியுள்ளார்.

அரசியல்வாதிகள் சட்ட விடயங்களில் நேரடியாக தலையிடுவதில்லை. என்றாலும், மோசடி, ஊழல் அல்லது நிதி நிதிப் பிரச்சினைப் பயன்படுத்துதல் போன்ற குற்றங்களில் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட எவரும் பொறுப்புக்கூற வேண்டும் என்ற தெளிவான செய்தியை அரசாங்கம் அனுப்பியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உறுதிப்பாடு கொள்கைக்கு அப்பால்பட்டது. கையூட்டல் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதியை பிரதிபலிக்கிறது என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிழக்கு மக்களை அடிமைகளாக்கும் சித்தாந்தங்களை மாற்ற வேண்டும்!"

கல்முனை, ஏப். 08

**இஸ்ரேல் அரசுக்கு எதிராக ஸ்ரிக்கர் ஒட்டிய இளைஞனின் கைது விவகாரத்தில் அநுர அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் முஸ்லிம் சமூகம் அசௌகரியத்தில் உள்ளது. இது தொடர்பில் உரிய தரப்பினர் மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் ஊடாக முஸ்லிம் மக்கள் ஆறுதலடைய கூடிய சந்தர்ப்பம் வரலாம் என்று சமூகம் சார் நடவடிக்கைகள் திறன் விருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான மைய தலைவர் எம். ஜே. எம். அன்வர் நௌஷாட் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளமை பெரும் பிரச்னையாக உள்ளது. அரசியல் தலைமைகள் தங்கள் அதிகார கதிரைக்காக இளைஞர்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பது நீண்ட காலமாக உள்ள ஒரு குற்றச்சாட்டாகும்.

இவ்வாறு போதைப்பொருளுடன் தொடர்புபட்ட குறித்த இளைஞர்கள் தேர்தல் வருகின்ற பொழுது அரசியல் கட்சிகளுடன் இணைந்து தங்களது செயல்களை மறைப்பதற்காக தூண்டப்படுகின்றார்கள்.

ஆனால் இவற்றை நிறுத்துவதற்கு எதிர்வரும் தேர்தல் முடிவு சான்றிதழ் அளிக்கும் என நினைக்கின்றேன்.

மக்களின் எதிர்பார்ப்பு என்பது போதைப்பொருளுக்கு எதிராகவும் இலஞ்சம் ஊழலுக்கு எதிராகவும் திரும்பியுள்ளது- என்றார். (எ)




## வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்

மட்டக்களப்பு, ஏப். 08

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக கூட்டம் மட்டக்களப்பு, மகிழூர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன், பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் செயலாளர் கி. துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் தி. சரவணபவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் தமிழ் அரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர். (எ)



## தொற்றா நோய் பரிசோதனை

சாய்ந்தமருது, ஏப். 08

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பிரதேசத்துக்குட்பட்ட பொதுமக்களுக்கு தொற்றா நோய்ப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேசத்துக்குட்பட்ட பொதுமக்களுக்கு தொற்றா நோய்ப் பரிசோதனை சாய்ந்தமருது ஜூம்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு குருதிப் பரிசோதனை மற்றும் ஆரோக்கிய வாழ்வுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. எல். எம். ஜெரீன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (எ)

# "அரசியலில் பொய் சொல்லி உழைப்பதற்கு வரவில்லை"

திருக்கோவில், ஏப். 08

அரசியலில் நான் உழைப்பதற்காகவோ, பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதற்காகவோ வரவில்லை. என்னிடம் இருக்கும் பணத்திலே பல சேவைகளைச் செய்து வருகின்றேன். அது தொடரும் என்று திருக்கோவில் பிரதேச சபைத்தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை குழு வேட்பாளர், தொழிலதிபர் சு. சசிகுமார் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் மற்றும் திருக்கோவில் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமையவே இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளேன். என் அரசியல் வருகையை தாங்கிக்கொள்ள முடியாத சில அரசியல்வாதிகள் எனக்கெதிராக பல பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். நாம் யாரையும் விமர்சிக்கப் போவதில்லை. எம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை முன்வைத்தே வாக்கு கேட்கின் றோம். எமது சேவையை பற்றி அறிந்த பிரதேச மக்களே எம்மை களமிறக்கியுள்ளனர். இம்முறை நடைபெறும் தேர்த லில் திருக்கோவில் பிரதேச சபையை எமது சுயேச்சை குழு கைப்பற்றி ஆட்சியமைக்கும்- என்றார். (எ-07)

# "திசைகாட்டிக்கு வாக்கு சேகரிப்போர் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டும்"

அக்கரைப்பற்று, ஏப். 08

திசைகாட்டிக்கு வாக்குச் சேகரிப்போர் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டிய நாள் வரும் என்பதை அறிந்து கவனமாக நடந்து கொள்ளுங்கள் என்று சுயேச்சை குழு வேட்பாளர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

முஸ்லிம் விரோத போக்கை அரசு கைவிடாமல் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை முஸ்லிம் பிரதேசங்களுக்கு அழைத்து வருவதனால் பயன் ஏதும் இல்லை என்பதை தேசிய மக்கள் சக்தியின் முஸ்லிம் செயல்பாட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அக்கரைப்பற்று மாநகர சபை தேர்தலில் சுயேச்சை குழுவில் போட்டியிடும் றுக்சான் தெரிவித்தார்.

**தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி காலம்**

ஆரம்பித்ததிலிருந்து இதுவரை முஸ்லிம்கள் மீதான புறக்கணிப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது. கிழக்கு மாகாண சபையில் ஆரம்பித்த புறக்கணிப்பு அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கான இடம் தரப்படாமல் அதன் பின்னர் அனைத்து விடயங்களிலும் முன்னுக்கு பின் முரண்பாடான போக்குடன் அரசு நடந்து கொண்டு வருவதால் மக்கள் அதிருப்தியில் உள்ளனர்- என்றார். அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ-06)

# கற்றாழை பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்துவதற்கு திட்டம்

கல்முனை, ஏப். 08

கிராமிய பெண்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக வேள்வி பெண் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக கற்றாழை பயிர்ச் செய்கையை ஊக்கப்படுத்துவதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முந்தினம் கல்முனை வை. எம். சி. ஏ. கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

வேள்வி ஒன்றியத்தின் தவிசாளர் ரிலீபா பேகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இயற்கை உணவின் முக்கியத்துவம், பெண்களின் சுயதொழில் அபிவிருத்தி பற்றியும் இதன்போது தெளிவுபடுத்தினார்.

அரசாங்கத்தின் ஊடாக பெண்களின் சுயதொழில் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி உதவிகள் பற்றியும், அரசாங்கத்தின் எதிர்காலச் செயல் பாடுகள் பற்றியும் கூறினார்.

இந்த நிகழ்வில் மனித அபிவிருத்தி தாபன இணைப்பாளர் எம். ஐ. நியாஸ், வேள்வி ஒன்றியத்தின் செயல்பாட்டாளர் எம். எம். முர்ஷித், வி. சி. பி. நிறுவன பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தி இணைப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெறவுள்ளவர்களும் கலந்து கொண்டனர்.


இந்தத் திட்டத்தின் ஊடாக சுமார் 2500 பெண்கள் வாழ்வாதார ரீதியாக பயனடையவுள்ளதுடன். இவர்களை கண்காணிப்பதற்காக 25 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படவுள்ளனர். (எ-09)



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு சிறீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்திரத் திருவிழா கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமானது. தினமும் பகல் இரவு திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரவு திருவிழா கட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்!



**வாஷிங்டன், ஏப். 08**


**ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கையால் அமெரிக்காவிலும் அதிருப்தி கிளம்பியுள்ளது. ட்ரம்பின் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.**


அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றது முதலே பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். ட்ரம்பின் நடவடிக்கைக்கு உள்நாட்டிலும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ட்ரம்ப் விதித்த பரஸ்பர வரி விதிப்பு காரணமாக அமெரிக்காவில் பொருட்களின் விலைகள் கடுமையாக உயரக்கூடும் என்று சொல்லப்படுகிறது. இதனால், அமெரிக்கர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர். இதனால், ட்ரம்ப் மற்றும் எலான் மஸ்க் கூட்டணிக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம் வெடித்துள்ளது.

மன்ஹாட்டன் முதல் அலாஸ்காவின் ஆங்கரேஜ் வரை, பல மாகாண தலைநகரங்கள் உட்பட, நாடு முழுவதும் உள்ள நகரங்களில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் ட்ரம்புக்கு எதிரான கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசு வேலைகளில் ஆட்குறைப்பு, பொருளாதாரம், குடியேற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களை கண்டித்து முழக்கமிட்டனர். கைகளில், கண்டன பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், "ட்ரம்பின் நிலைப்பாடு தெளிவாகவுள்ளது: தகுதியான பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு, மருத்துவ உதவி ஆகியவற்றை அவர் எப்போதும் பாதுகாப்பார். ஜனநாயக கட்சியினரின் நிலைப்பாடு சட்டவிரோதமாக குடியேறிய வெளிநாட்டினருக்கு சமூகப் பாதுகாப்பு, மருத்துவ உதவி வழங்குவதாகும். அது இந்தத் திட்டங்களை சீர்குலைத்து அமெரிக்க மக்களை நசுக்கும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அயோத்தியில் பாலராமர் நெற்றியில் சூரிய திலகம்



அயோத்தி, ஏப். 08

ராம நவமி தினத்தில் அயோத்தி பால ராமர் நெற்றியில் சூரிய ஒளி திலகமிடப்பட்டது.

இந்தியா முழுவதும் நேற்று முன்தினம் ராம நவமி கொண்டாடப்பட்டது. இதையொட்டி அயோத்தி ராமர் கோவிலில் அதிகாலை 5 மணிக்கு பூஜை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

மதியம் 12 மணிக்கு பால ராமரின் நெற்றியில் சூரிய ஒளி திலகமிடப்பட்டது. அப்போது சுமார் 4 நிமிடங்கள் வரை பால ராமரின் நெற்றியில் சூரிய ஒளி பாய்ந்தது. (எ)

# வக்பு சட்டத்தை கண்டித்து நாம் தமிழர் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப். 08

வக்பு திருத்தச் சட்டத்தை கண்டித்து எதிர்வரும் 13ஆம் திகதி நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது. வக்பு சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வலியுறுத்தி, நா.த.க. சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் 13ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். சென்னையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமை தாங்குகிறார் என அந்தக் கட்சி அறிவித்துள்ளது. (எ)

# வக்பு சட்ட திருத்தத்தை நீதிமன்றம் நிராகரிக்கும்

## ப. சிதம்பரம் நம்பிக்கை

சென்னை, ஏப். 08

வக்பு சட்ட திருத்தத்தில் ஏராளமான பிழைகள் இருப்பதால், இந்த சட்ட திருத்தம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் நிச்சயம் அறிவிக்கும் என காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

வக்பு சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, நேற்று முன்தினம் தமிழகம் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கண்டித்து சென்னை மாவட்ட காங்கிரஸ் சார்பில் சைதாப்பேட்டையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் மேலும் கூறுகையில்,

"மத்தியில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற 2014ஆம் ஆண்டுக்கு பிறகு, முஸ்லிம் மக்களுக்கு எதிராக தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. குடியுரிமை திருத்தச் சட்டம், ஜம்மு காஷ்மீரை இரண்டாக உடைத்து மாநில அந்தஸ்தை பறித்து யூனியன் பிரதேசத்தை உருவாக்கியது, பொது சிவில் சட்டம் என முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அந்த வரிசையில் இப்போது வக்பு சட்ட திருத்தமும் சேர்ந்துள்ளது.

இதில் ஏராளமான பிழைகள் உள்ளன. இது அரசமைப்பு சட்டத்துக்கு எதிரானது. இனி மேல் முஸ்லிம் அல்லாதவர்கள் வக்புக்கு சொத்துகளை வழங்க முடியாது. முஸ்லிமாக தொடர்ந்து 5 ஆண்டுகள் இருப்பவர்கள் தான் வக்புக்கு சொத்துகளை வழங்க முடியும். இதற்கெல்லாம் மேலாக, வக்பு சபை நிர்வாகத்தில் முஸ்லிம்கள் அல்லாதவர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற அநீதி, முஸ்லிம்களுக்கு மட்டும்தான் என்று எண்ணக்கூடாது. வக்பு சபை நிர்வாகத்தில் முஸ்லிம் அல்லாதவர்களை நியமிக்கலாம் என்ற மிகப்பெரிய பிழை இந்த சட்ட திருத்தத்தில் உள்ளது. இதனால், இந்த சட்ட திருத்தம் செல்லாது என உச்ச நீதிமன்றம் நிச்சயம் அறிவிக்கும்"- என்றார். (எ)

# சில நேரங்களில் மருந்து அவசியம்


## வரி விதிப்புக்கு ட்ரம்ப் விளக்கம்

வாஷிங்டன், ஏப். 08

அமெரிக்காவுக்கு வரும் வெளிநாட்டுப் பொருட்களுக்கு வரி விகிதங்களை உயர்த்தி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்பால் அமெரிக்க பங்குச்சந்தை கடும் சரிவை சந்தித்தது. இது குறித்த கேள்விக்குப் பதிலளித்த ட்ரம்ப், "எதையாவது சரி செய்ய வேண்டுமென்றால் சில நேரங்களில் மருந்து அவசியம் தானே"- என்று தனது வரி விதிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்திப் பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புளோரிடாவில் கோல்ப் விளையாடிவிட்டு வாஷிங்டனுக்கு திரும்பிய ட்ரம்ப் விமானத்தில் செய்தியாளர்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டார்.

அப்போது அவர் கூறுகையில், "உலக நாடுகளால் நாங்கள் மிக மோசமாக நடத்தப்பட்டோம். முன்பிருந்த முட்டாள்தனமான தலைமை அதை அனுமதித்தது. ஆனால், நாங்கள் அதை சரி செய்கிறோம். சிலவற்றை சரி செய்ய சில நேரங்களில் மருந்து அவசியமாகிறது. அப்படித்தான் இந்த வரி விதிப்பும். இது ஓர் அழகான நடவடிக்கை.



பங்குச்சந்தைகளில் என்ன நடக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், எல்லா சவால்களையும் சமாளிக்கும் அளவுக்கு அமெரிக்கா மிகவும் வலுவான தேசம். நாங்கள் பரஸ்பர வரியை விதித்துள்ள நிலையில் உலக நாடுகள் பலவும் எங்களோடு ஏதேனும் ஒப்பந்தம் செய்து சுமையைக் குறைத்துக் கொள்ள முடியாதா என்று போராடி வருகின்றன. ஆனால், இந்த வரி விதிப்பை திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை"- என்றார்.

ட்ரம்ப் வரி விதிப்பால் பணவீக்கம் அதிகரிக்கும், பொருளாதார மந்தநிலை ஏற்படக்கூடும் என்று அமெரிக்க முதலீட்டாளர்கள் அச்சம் தெரிவித்துள்ள நிலையில் ட்ரம்ப்பின் பொருளாதார ஆலோசனைக்குழு அதிகாரிகள் அத்தகைய அச்சம் தேவையில்லை என்று கூறியுள்ளனர். ஆனால், கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே அமெரிக்க பங்குச்சந்தைகளில் 6 ட்ரில்லியன் டொலர் வரை சரிவு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

# இங்கிலாந்தில் மலை போல் குவிந்து கிடக்கும் குப்பைகள்

## எலிகள் பெரும் அட்டகாசம்

லண்டன், ஏப். 08

இங்கிலாந்தின் 2ஆவது பெரிய நகரான பர்மிங்காமில் துப்புரவு தொழிலாளர்கள் ஒரு மாத காலத்துக்கு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பள முரண்பாடு, பதவி உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து அவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இதனால், வீதிகள் முழுவதும் குப்பைகள் தேங்கியுள்ளன. அதிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் காற்றில் பரவி மக்களைத் துன்பத்துக்கு ஆளாக்கி வருகிறது.

இதனால், மொத்தம் 17 ஆயிரம் தொன் குப்பைகள் [illegible] ன. ஏறக்குறைய 400 பேர் வரை இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பர்மிங்காம் நகரில் 11 இலட்சம் பேர் வரை குடியிருப்பு வாசிகள் உள்ளனர். அவர்களின் வீடு வழியே குப்பைகளை சேகரிக்க [illegible] சென்றால் மக்கள் திரளாக ஓடி செல்கின்றனர்.

எலிகளும், நரிகளும் மற்றும் பூனைகளும் சுற்றி திரிகின்றன. குப்பைகளில் புழுக்களும் நெளிந்து செல்கின்றன. இதுபற்றிய வீடியோவும் வைரலானது. இதேபோன்று, குப்பைகளை சேகரிக்க சென்றவர்களை எலிகள் விரட்டி செல்லும் மற்றொரு வீடியோவும் வைரலானது.

இதனால், இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு அரசியல் ரீதியாக எதிர்ப்பு கிளம்பி வருகிறது. எதிர்க்கட்சிகள் அரசை கடுமையாக சாடி வருகின்றன. ஸ்டார்மரும் இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார். இது முற்றிலும் ஏற்று கொள்ள முடியாதது என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத்தை வீழ்த்தி குஜராத் அசத்தல் வெற்றி!




ஹைதராபாத், ஏப். 08

7 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வீழ்த்தி குஜராத் ரைற்றன்ஸ் அணி அசத்தல் வெற்றி பெற்றது.


ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - குஜராத் ரைற்றன்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. ட்ராவிஸ் ஹெட் 8 ஓட்டங்களிலும், அபிஷேக் சர்மா 18 ஓட்டங்களிலும் சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். அவர்களை தொடர்ந்து களமிறங்கிய இஷான் கிஷனும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. அவர் 17 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்து அணிக்கு வலுச்சேர்த்த நிதிஷ் ரெட்டி - கிளாசென் இணை 50 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிரிந்தது. கிளாசென் 27 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே நிதிஷ் ரெட்டியும் 31 ஓட்டங்களில் சாய் கிஷோர் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். அதிரடிக்கு பெயர் போன ஹைதராபாத் அணி இந்த சீசனில் தொடர்ந்து சொதப்பி வருகிறது.

இறுதி கட்டத்தில் கம்மின்ஸ் அதிரடியாக விளையாடி 22 ஓட்டங்கள் (9 பந்துகள்) அடித்தார். இதன் மூலம் ஹைதராபாத் அணி ஓரளவு நல்ல நிலையை எட்டியது. இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் அந்த அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்கள் அடித்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சிராஜ் 4 விக்கெட்களும், சாய் கிஷோர் மற்றும் பிரசித் கிருஷ்ணா தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதையடுத்து 153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய சாய் சுதர்சன் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜோஸ் பட்லர் ஓட்டமின்றி வெளியேறினார். அடுத்து ஜோடி சேர்ந்த சுப்மன் கில், வாஷிங்டன் சுந்தர் இருவரும் அதிரடியாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். 49 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் வாஷிங்டன் சுந்தர் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 16.4 ஓவர்கள் முடிவில் குஜராத் அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது. இதன்மூலம் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வீழ்த்தி குஜராத் அணி வெற்றி பெற்றது. சுப்மன் கில் அரைச்சதம் கடந்து 61 ஓட்டங்களுடனும், ஷெர்பேன் ரூதர்போர்ட் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (எ)




## அதிக வெற்றிகளுடன் சஞ்சு சாம்சன் சாதனை

முலான்பூர், ஏப். 08

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிகளில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக அதிக வெற்றிகளை பெற்றுக்கொடுத்த தலைவர் என்ற பெருமையை சஞ்சு சாம்சன் பெற்றுள்ளார்.

ஐ. பி. எல்.- 2025 சீசனின் 18ஆவது ஆட்டம் நியூ சண்டிகரில் உள்ள முலான்பூரில் நடைபெற்றது. இதில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில், பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தியது. இதையடுத்து, ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சஞ்சு சாம்சன் தலைமையில் ராஜஸ்தான் அணி 32ஆவது வெற்றியைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் ராஜஸ்தான் அணிக்கு அதிக வெற்றிகளைத் தேடித் தந்த தலைவர் என்ற சாதனையை சஞ்சு சாம்சன் படைத்தார். இதற்கு முன் ராஜஸ்தான் அணியின் தலைவராக இருந்த ஷேன் வோர்ன் 31 போட்டிகளில் அந்த அணிக்கு வெற்றி பெற்றுக்கொடுத்து சாதனை படைத்திருந்தார். (எ)

## "இந்தியா நிராகரித்ததை ஜீரணிக்க முடியவில்லை"


ஐதராபாத், ஏப். 08

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இந்திய அணியில் தெரிவு செய்யப்படாததை ஜீரணிக்க முடியவில்லை என்று அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் தெரிவித்தார்.

ஐ. பி. எல். தொடரில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - குஜராத் ரைற்றன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் குஜராத் தரப்பில் சிராஜ் 17 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது முகமது சிராஜூக்கு வழங்கப்பட்டது.

இதையடுத்து முகமது சிராஜ் அளித்த பேட்டியின் போது கூறுகையில், "உங்கள் சொந்த மைதானத்தில் விளையாடுவது எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. இந்தக் கூட்டத்தில் என் குடும்பத்தினரும் இருந்தார்கள். அது என்னை வெகுவாகவே உயர்த்தியது. நான் ஏழு வருடங்களாக ஆர். சி. பி அணியில் இருந்துள்ளேன். என் பந்துவீச்சு மற்றும் மனநிலை குறித்து நான் கடுமையாக உழைத்து உள்ளேன்.

அது எனக்கு நன்றாக வேலை செய்கிறது. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு நான் தெரிவு செய்யப்படாததை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால், என்னை நானே உற்சாகப்படுத்தி என் தவறுகளை சரி செய்து மீண்டும் மகிழ்ச்சியாக விளையாட்டில் ஈடுபட தொடங்கினேன்"- என்றார். (எ)




## ஐ. பி. எல். வரலாற்றில் சிராஜ் சிறந்த பந்துவீச்சு

ஹைதராபாத், ஏப். 08

ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் முகமது சிராஜ் 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

ஐ. பி. எல். தொடரில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - குஜராத் ரைற்றன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழந்து 152 ஓட்டங்கள் எடுத்தது. குஜராத் தரப்பில் சிராஜ் 17 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது முகமது சிராஜூக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், 17 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் தனது சிறந்த பந்துவீச்சை சிராஜ் பதிவு செய்துள்ளார். இதற்கு முன்னர் கடந்த 2023ஆம் ஆண்டு பஞ்சாப்புக்கு எதிரான போட்டியில் 21 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்கள் வீழ்த்தியதே அவரது சிறந்த பந்துவீச்சாக இருந்தது.

அதை தற்போது முகமது சிராஜ் முறியடித்துள்ளார். மேலும், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 4 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் முகமது சிராஜ் ஐ.பி. எல். தொடரில் 100 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். (எ)

## சார்லஸ்டன் ரென்னிஸ் சம்பியனானார் ஜெசிகா

கலிபோர்னியா, ஏப்.08

சார்லஸ்டன் ரென்னிஸ் சம்பியன் தொடரில் ஜெசிகா பெகுலா பட்டம் வென்றார்.

பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற இந்த ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்றது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, சக நாட்டவரான சோபியா கெனின் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய ஜெசிகா பெகுலா 6-3, 7-5 என்ற செட் கணக்கில் சோபியா கெனினை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)



## சென்னை - பஞ்சாப் இன்று மோதல்

சென்னை, ஏப். 08

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக் கும் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி இன்று நடைபெறுகிறது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் தொடர் தோல்வி களைச் சந்தித்து வரும் சென்னை அணி இன்று 8ஆம் திகதி முல்லன் பூரில் பஞ்சாப் அணியையும், இதைத் தொடர்ந்து எதிர்வரும் 11ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத் தில் கொல்கத்தா அணியையும் சந் திக்கிறது.

இரு போட்டிகளும் இரவு 07.30 மணிக்கு நடக்கிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டவை வருமாறு,

"அமெரிக்காவுடன் இலங்கையின் வர்த்தக உறவை சமநிலைப்படுத்துவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் பயனுள்ள கலந்துரையாடல் நடைபெற்றது. அமெரிக்கா ஏற்றுமதிகளுக்கு ஈடான அணுகுமுறை வழங்கும் முக்கியத்துவத்தை நான் இதன்போது வலியுறுத்தினேன்.

நியாயமான, சமநிலைபடுத்தப்பட்ட வர்த்தக உறவு பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. இரு நாடுகளிலும் தொழில்துறைகளை வலுப்படுத்துகிறது - என்றுள்ளது. (ஐ)

## ஐ.சி.சி...

சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை அதிகாரிகள் விசாரணைகளுக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் பரந்த அதிகாரங்களை அதிகாரிகள் தற்போது நாடுகின்றார்கள் மற்றும் துஸ்பிரயோகம் செய்கின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடியாக தடை விதிக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. தெற்சியாவுக்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிரிதி சிங் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற பெரும் மனித உரிமைகள் மீறல் அல்லது சர்வதேச மனித மனிதாபிமான சட்டங்கள் பெருமளவில் மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்து - ஒருங்கிணைத்து - பகுப்பாய்வு செய்து பாதுகாத்தலுக்கான ஆணையை கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டத்தை நிராகரித்தமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இலங்கையின் உள்நாட்டு மோதலின் போது பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஆணையாளர் பணிமனையுடன் ஆக்கபூர்வமான விதத்தில் இணைந்து செயல்படவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கவேண்டும். உள்நாட்டு ஆயுத மோதலின் போது இடம்பெற்ற குற்றங்களுக்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றுக்கு முடிவை காண்பதற்கும் உதவும் என்பதால் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம்.

இலங்கை இன்னமும் சர்வதேச குற்றங்களை அதன் உள்நாட்டு சட்ட கட்டமைப்புக்குள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் நீதியை நாடும் போது துன்புறுத்தலை எதிர்கொள்வது உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## விபத்தில்...

உயிரிழந்த இளைஞர் கடந்த சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மந்திகை - மடத்தடி பகுதியில் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானார். இதில், படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை காலை உயிரிழந்தார். (ஐ)

## பயங்கரவாத...

அவரை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

முன்னதாக, ருஷ்டி பயங்கரவாத தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை அரசாங்கத்துக்கு பல நெருக்கடிகளை சர்வதேச அளவில் ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.எம்.எவ்வின்...

இலக்குகளை அடைவது குறித்து பேசப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பை தொடர்ந்து இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் குறித்தும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் சஞ்சய பந்த், சிரேஷ்ட தூதுக் குழுத் தலைவர்களான பீற்றர் ப்ரூவர், ஈவான் பபாஜியோரிஜியோ உள்ளிட்டோரும் அரசாங்கத்தின் சார்பில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## தென்னக்...

தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகருக்கு பிரேரணை கையளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரேரணையில் அவரின் தவறான நடத்தை, பதவியை தவறான முறையில் பயன்படுத்தியமை, அவர் தனது பொலிஸ் மா அதிபர் பதவியை பயன்படுத்தி தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை அவரின் பதவிக் காலத்தில் முறையற்ற விதத்தில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் உயர் பதவியில் இருக்கின்ற அரச அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை பின்பற்றுவதற்கான யோசனையாகவே இந்த பிரேரணை நாளை (இன்று) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரச பதவியை தவறான முறையில் பயன்படுத்திய ஒரு நபரே தேசபந்து தென்னக்கோன். அவர் தொடர்பில் பொறுப்புக்களை நிறைவேற்றும் பாராளுமன்றமாக செயல்பட உள்ளது. தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக இரண்டாம் வாசிப்பு மீதான பிரேரணையாகவே இந்தப் பிரேரணை நாளை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. வாக்கெடுப்பின் பின்னர் அது நிறைவேற்றப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## நாட்டின் சனத்தொகையில்...



0.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், சனத்தொகையில் அதிகரிப்பு இருந்தபோதிலும் வளர்ச்சியில் மந்த நிலையே உள்ளது.

நாட்டில் அதிகூடிய சனத்தொகை கொண்ட மாகாணமாக மேல் மாகாணம் உள்ளது. 28.1 வீத மக்கள் அங்கு வசிக்கின்றனர். இதேவேளை, மிகக் குறைந்த சனத்தொகை கொண்ட மாகாணமாக வடக்கு உள்ளது. இங்கு 5.3 சதவீத மக்கள் வசிக்கின்றனர்.

மாவட்ட அடிப்படையில் கம்பஹா மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. 24 இலட்சத்து 33 ஆயிரத்து 685 பேர் இங்கு வசிக்கின்றனர். 23 இலட்சத்து 74 ஆயிரத்து 461 பேருடன் கொழும்பு மாவட்டம் அடுத்த இடத்திலுள்ளது. அத்துடன், குருநாகல், கண்டி, களுத்துறை இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களில் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இதேவேளை, சனத்தொகை மிகக் குறைந்த மாவட்டங்களாக வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்கள் பதிவாகியுள்ளன. முல்லைத்தீவில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 542 பேரும் மன்னாரில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 674 பேரும் கிளிநொச்சியில் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 434 பேரும் வவுனியாவில் ஒரு இலட்சத்து 72 ஆயிரத்து 257 பேரும் உள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 இலட்சத்து 94 ஆயிரத்து 333 பேர் வசிக்கின்றனர். இது மொத்த சனத்தொகையில் 2.7 சதவீதமாகும்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் மட்டக்களப்பில் 5 இலட்சத்து 95 ஆயிரத்து 435 பேரும், அம்பாறையில் 7 இலட்சத்து 44 ஆயிரத்து 150 பேரும் திருகோணமலையில் 4 இலட்சத்து 42 ஆயிரத்து 465 பேரும் வசிக்கின்றனர்.

எனினும், சனத்தொகை வளர்ச்சியின் படி 2.23 சதவீதத்தை முல்லைத்தீவு மாவட்டம் கொண்டுள்ளது. இதே நேரம், 0.01 சதவீத வளர்ச்சியையே வவுனியா மாவட்டம் கொண்டுள்ளது.

இதேநேரம், சனத்தொகை அடர்த்தி அதிகம் கொண்ட மாவட்டமாக கொழும்பு காணப்படுகிறது. இங்கு ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பில் 3 ஆயிரத்து 549 பேர் வசிக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் 630 பேரும் மட்டக்களப்பில் 251 பேரும் வசிக்கின்றனர். குறைந்த சனத்தொகை அடர்த்தி கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு உள்ளது. இங்கு ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பில் 50 பேரே உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாவட்டத்தில் 536 பேர் வசிப்பிடமின்றி உள்ளனர். நாடளாவிய ரீதியில் வசிப்பிடமற்றோர் இங்கேயே அதிகம். கிளிநொச்சி மாவட்டத்தில் அவ்வாறான எவரும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பங்கு...

ஆரம்பமானது.

எஸ் அன்ட் பி எஸ். எல். 20 குறியீடு 240.45 புள்ளிகள் 5.3 சதவீதம் சரிந்து 4,292.90 புள்ளிகளாகவும் அனைத்து பங்கு விலை சுட்டிகள் ஆரம்ப வர்த்தகத்தில் 4.16 சதவீதம் - 639.01 புள்ளிகள் சரிந்து 14,734.34 புள்ளிகளாகவும் காணப்பட்டன.

பங்குகள் முந்தைய நாட்களுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்துக்கும் குறைவாக சரிவை சந்திக்கும்போது பங்குச் சந்தை வர்த்தகம் இடைநிறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வர்த்தக போர் காரணமாக ஆசிய சந்தைகள் சரிவை சந்தித்துள்ளன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## சட்டம்...

சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு புதிய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைப் பாதுகாக்கும் அதேவேளையில், திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு இந்த நாடு பலியாக இடமளிக்கக்கூடாது - என்றும் கூறினார்.

களுத்துறை - கட்டுகுருந்த விசேட அதிரடிப் படை முகாமில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## என்னை

அவற்றுக்கு நாமல் எம். பி. அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி: நீங்கள் சி. ஐ. டிக்கு எதற்காக அழைக்கப்பட்டுள்ளீர்கள்?

பதில் : டெய்ஸி பாட்டி தொடர்பில் விடயங்களை அறிந்து கொள்வதற்காக சி.ரு.டி க்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. தெரிந்தவற்றை கூறிவிட்டு செல்லலாம் என வந்துள்ளேன்.

கேள்வி : இதற்கு முன்னரும் சி. ஐ. டிக்கு அழைக்கப்பட்டிருந்தீர்கள் அல்லவா?

பதில் : எனக்கு சி. ஐ. டி. வீடாக மாறிவிட்டது. அதாவது தற்போது நான் அடிக்கடி வந்து போகும் இடமாக மாறியுள்ளது.

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் எம்மை சி. ஐ. டிக்கு அழைக்கிறார்கள். இங்கு அடிக்கடி வருகிறோம். அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் வழங்கி விட்டு செல்கிறோம்.

கேள்வி : தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலமே உள்ளது. உங்களை சி. ஐ. டிக்கு அழைப்பது தேர்தலில் நெருக்கடியை ஏற்படுத்தும் அல்லவா?


பதில் : இது எமக்கு பெரிய விடயமல்ல. தமக்கு வாக்களிக்கவில்லை என்றால் பிரதேச சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படாது என ஜனாதிபதி எச்சரிக்கை விடுக்கிறார். இது பெரும் அச்சுறுத்தல் அல்லவா? சி. ஐ. டிக்கு எம்மை அழைப்பது சாதாரண விடயமாகும். எம்மை சிறையில் அடைப்பதால் எமது தேர்தல் பிரசாரங்களுக்கு பாதிப்பு ஏற்படாது. நாமல் ராஜபக்ஷவை விளக்கமறியலில் வைப்பதால் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மகிந்த நலமாக இருக்கிறார்

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நலமாக இருக்கிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்றைய தினம் வந்த அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மகிந்த ராஜபக்ஷ சுகயீனம் காரணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அண்மையில் சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், நான் வீட்டுக்கு சென்று பார்த்தபோது தந்தை மகிந்த ராஜபக்ஷ நலமாக இருந்தார்" - என்று நாமல் கூறினார். (ஐ)

## 2 இலட்சம் சுற்றுலாவிகள் மார்ச்சில் வருகை தந்தனர்!

கொழும்பு, ஏப். 08

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை 2 இலட்சத்து 29 ஆயிரத்து 298 சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

மார்ச் மாதத்தில் அதிகபட்ச சுற்றுலா பயணிகள் வருகை மார்ச் 01 முதல் 07 வரை பதிவாகியுள்ளது. இதன்போது, 53 ஆயிரத்து 113 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தனர்.

மார்ச் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த 39 ஆயிரத்து 212 சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

அத்துடன், இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, ரஷ்யாவிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டு 30 இலட்சம் சுற்றுலா பயணிகளை நாடு இலக்காகக் கொண்டுள்ள நிலையில் முதல் மூன்று மாதங்களில் இதுவரை 7 இலட்சத்து 22 ஆயிரத்து 276 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

## அமெரிக்க பொருட்களுக்கான வரியை பூச்சியமாக்குங்கள்!

### ரவி கருணாநாயக்கா

கொழும்பு, ஏப். 08

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு சுங்கவரி பூச்சியமாக குறைக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை அமெரிக்காவுடன் நமக்கு பெரிதாக வர்த்தக சிக்கல்கள் இருந்ததில்லை. அமெரிக்காவுக்கு நன்றி கூற வேண்டும். ஆனால், தற்போது டொனால்ட் ட்ரம்பின் அரசியல் போக்கால் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன. அமெரிக்காவுடனான வர்த்தகத்தில், நாங்கள் இறக்குமதி செய்யும் அளவு அதிகமாக காணப்படுவதாகவும் அந்தப் பொருட்களை வேறு நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட முடியும்.

அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதன் மூலம் தீர்வுகளை எட்ட முயற்சிக்கப்பட வேண்டும். சுங்க வரிக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒரே நிலையான வரி கொள்கை பொருத்தமாகாது - என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

### கொழும்பு மாநாகர சபை உட்பட

# சில உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்த இடைக்கால தடை!

கொழும்பு, ஏப். 08

**கொழும்பு மாநாகர சபை உள்ளிட்ட சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை நேற்று பிறப்பித்தது.**

தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து அரசியல் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் தாக்கல் செய்த எழுத்தாணை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை எதிர்வரும் மே 5ஆம் திகதிக்கு முன்னதாக தாக்கல் செய்யுமாறும் ஆட்சேபனைகள் தொடர்பில் எதிர்ப்புகள் இருப்பின் மே 7ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறும் நீதிபதிகள் குழாம் மனுதாரர்களுக்கு உத்தரவிட்டது.

குறித்த எழுத்தாணை மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் மே 16ஆம் திகதி நடத்துவதற்கும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அன்று வரை இந்த இடைக்கால தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## சாமர சம்பத் எம்.பியின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஏப். 08

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் விளக்கமறியலை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று திங்கட்கிழமை பதுளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (ஐ)

## சி. ஐ. டியில் நாமல் நேற்று வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 07

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் அளித்தார்.

நிதி மோசடி வழக்கு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட அவரின் பாட்டியான டெய்சி பொரெஸ்ட் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முற்பட்டார்.

சுமார் 45 நிமிடங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

# இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடியை மோடியின் வருகை ஊக்கப்படுத்தியுள்ளது!

### கடற்றொழிலாளர் சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஏப். 08

இந்திய பிரதமர் மோடியின் இலங்கை வருகை எமது கடலில் அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்களை ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் சம்மேளன தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்திய பிரதமர் இலங்கை வருவதையிட்டு வடக்கு மீனவர் சமூகம் எதிர்பார்ப்புகளின் மத்தியில் இருந்த நிலையில் அந்த எதிர்பார்ப்பு மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் மோடி இலங்கையிலிருந்த வேளை இந்திய இழுவை படகுகள் எமது கடற்பரப்புக்குள் உள் நுழைந்து எமது வளங்களை அபகரித்துச் சென்றன. இந்த செயல், நான் இருக்கிறேன் நீங்கள் வாருங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று இந்திய மீனவர்களை பிரதமர் மோடி ஊக்கப்படுத்துவதாகவே நாம் பார்த்தோம். (ஐ)

## 2.4 கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் பறிமுதல்!



கொழும்பு, ஏப். 08

சுங்கத் திணைக்களம் முன்னெடுத்த நடவடிக்கையால் பல உள்ளூர் பயணிகளால் நாட்டுக்கு கடத்தி வரப்பட்ட 2.4 கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவில் இணைக்கப்பட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் முன்னெடுத்த நடவடிக்கையிலேயே இந்த சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது மொத்தம் 1,843 அட்டைப் பெட்டிகளில் 3 இலட்சத்து 68 ஆயிரத்து 600 சிகரெட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

சுங்க ஊடகப் பேச்சாளர் ஏ. டி. ஜி. சீவலி அருகொடவின் கூற்றுப்படி, பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்களின் மதிப்பு அண்ணளவாக 2 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும். (ஐ)

## இலங்கைக்கு கடலூரிலிருந்து கப்பல்கள் மூலம் பொருட்கள்!

### நாளை மறுதினம் முதல் ஆரம்பம்

சென்னை, ஏப். 08

கடலூர் துறைமுகத்தில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு நாளை மறுதினம் முதல் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடலூர் துறைமுகத்தில் இருந்து இரும்பு தாது உள்ளிட்ட பொருட்கள் ஏற்றுமதியும் யூரியா, டி.ஏ.பி., போன்ற பொருட்கள் இறக்குமதியும் நடந்துள்ளன.

எனினும் 2002ஆம் ஆண்டுக்குப் பின் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. சாகர் மாலா திட்டத்தில் இத்துறைமுகம் மேம்படுத்தப்பட்டு, ஏற்றுமதி, இறக்குமதிக்கு தயார் நிலையில் உள்ளது.

"கடலூர் துறைமுகம் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி மேற்கொள்ளப்பட உள்ளது. ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றுகடலூர் ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி, இலங்கைக்கு கட்டுமான பொருட்கள், சிமெந்து, வெங்காயம், துணி வகைகள் மற்றும் இதர பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

குறிப்பாக, பாம்பன் பாலம் திறக்கப்பட்டுள்ளதால் நாளை மறுதினம் முதல் வெங்காயம் ஏற்றுமதி ஆரம்பிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org